REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: சித்திரை 31உ திங்கள் (13—5—57) ★ வெளியூர்: வைகாசி 1உ செவ்வாய் (14—5—57) இதழ் [286

புயல்களைக் கண்டுபிடிக்கும் இயந்திரம்!

★

வாஷிங்டன்—

கடும்புயல், சுழற்காற்று ஆகியவற்றைக் கண்டுபிடிக்க ராடார் இயந்திரங்களை உபயோகிக்க முயற்சிக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 300 மைல் தூரத்திற்குப் பயன்படும் இப்புதுக் கருவி 70,000 அடி உயரம் வரையிலும் வான நிலையை பரிசீலனை செய்யக் கூடியதாகும்.

கடும் புயல் காற்று அடிக்கும் இடங்களிலும், வெள்ளம் ஏற்படும் இடங்களிலும் இவை பொருத்தப்படும்.

கைத்தறிக்கு எதிர்காலம் உண்டா, இல்லையா?

உண்டென்றால் சர்க்கார் செய்யப் போவதென்ன?

போட்டியைத் தவிர்ப்பது எப்படி? ஆபத்தைத் தடுப்பது எங்ஙனம்?

சென்னை கைத்தறி வார விழாவில் அண்ணா அறைகூவல்

"கைத்தறியாளர் நிலை உயர சர்க்கார் இதுவரை செய்துள்ளதை நான் பாராட்டுகிறேன்; அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"ஆனால், இனியும் செய்யவேண்டிய காரியங்களை இந்தச் சந்தர்ப்பத்தில் என்னால் சொல்லாமலிருக்க முடியவில்லை.

"முதலில், கைத்தறிக்கு எதிர்காலம் இருக்கிறதா, இல்லையா? எதிர்காலம் இருக்க வேண்டுமென்று சர்க்கார் விரும்புகிறதா, இல்லையா என்பதை, நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

"அப்படி எதிர்காலம் இருக்க வேண்டுமென சர்க்கார் விரும்புகிறதென்றால், கைத்தறிக்கு ஏற்படும் போட்டிகளைத் தவிர்க்கவும், ஆபத்துக்களைத் தடுக்கவும் சர்க்கார் என்ன செய்யப்போகிறது?

"ஆலைத் துணிகளுக்கு வரி விதித்து, அந்த 'செஸ்' நிதி எனப்படும் 'மகிமை'ப் பணத்தைக் கைத்தறிக்கு வழங்குவதாலேயே கைத்தறியைக் காப்பாற்றிவிட முடியும் என்று சர்க்கார் கருதுகிறதா?

—என்று அண்ணா அவர்கள், 11-5-57 மாலை சென்னை-எழும்பூரில் நடைபெற்ற கைத்தறி வார விழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

நிகழ்ச்சி

அகில இந்தியக் கைத்தறி வாரத்தை ஒட்டி, சென்னையில் நடைபெற்ற கைத்தறி வார விழாவின் கடைசி நாள் நிகழ்ச்சி 11—5—57 மாலை 6-30 மணிக்கு சென்னை—எழும்பூரில் நடைபெற்றது.

சென்னை மாநில கைத்தறியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் எம். பி. நாச்சிமுத்து அவர்கள் எல்லோரையும் வரவேற்றுவிட்டு, கூட்டத்திற்கு, சென்னை நகரசபைத் தலைவர் கே. என். சீனிவாசன் அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொண்டார்.

கூட்டத்திற்குத் தலைமை ஏற்ற 'மேயர்' சீனிவாசன் அவர்கள், அண்ணா அவர்களை தனக்கு நெடுநாட்களாகத் தெரியும் என்றும், தனக்கும் அண்ணாவுக்கும் அரசியலில் கருத்து வேறுபாடு இருப்பினும், தமிழர் நலன் காப்பதில் ஒத்த கருத்துடையவர்கள் என்றும் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், கைத்தறியாளர் நிலை உயர சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகளை எடுத்துரைத்துவிட்டு, 'இது போன்ற விழாக்களில், அரசியல் கருத்துக்களைப் பேசாமலிருக்க வேண்டும்' என்றும் கூறினார்.

அண்ணா அவர்கள், மேயரின் 'அரசியல் வெறுப்பு'க்குத் தமது உரையில் தக்க பதில் கூறியதுடன், கைத்தறியாளரின் இன்றைய நிலையையும், பிரச்சினைகளையும் அலசிக்காட்டி, கைத்தறி நின்று நிலைக்க, அரிய கருத்துரையையும் தந்தார்கள்.

இறுதியாக, சங்கத்தின் துணைத் தலைவர் அருணாசலம் எம்.எல்.சி. அவர்கள் நன்றி நவின்றார்கள்.

விழாவின் வேறெந்த நாளிலும் வந்திராத அளவுக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள்—எண்ணற்ற தாய்மார்கள் உள்ளிட்டு, அன்று கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

★

மகிழ்ச்சி

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"ஆண்டுதோறும் நடத்தப்பட்டுவரும் இந்தக் கைத்தறி வார விழாவில், கைத்தறியாளர்களின் நிலையை ஆண்டுக்கு ஆண்டு கணக்கெடுப்பதற்காக என்போன்றவர்களுக்கு வாய்ப்பு தரப்படுவது கண்டு நான் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

அழுத்தமானவர்

"தலைமை தாங்குகிற மேயர் சீனிவாசன் அவர்கள், 'என்னுடன் நெடுநாளாகத் தொடர்பு கொண்டவர்' என்பதை விளக்கினார்.

"அவர், நம்முடைய கைத்தறியைப்போல சற்று அழுத்தமானவர். எத்தனைதான் கல்லில் போட்டுத் துவைத்தாலும் கைத்தறித் துணி நைந்து போகாது; அதுபோல, நானும் அவரை என்னுடைய நேசம் என்ற கல்லில் போட்டு துவைக்கிறேன்—அவரும், தமது கொள்கையிலிருந்து விலகிவிடாமல் நின்று கொண்டிருக்கிறார்—நான் மகிழ்கிறேன்; ஏனெனில், இன்று அரசியல் உலகில் பலர், அதிகம் துவைக்காமலேயே நைந்து போய்விடுவதை நாம் காண்கிறோம்.

"அவர் தமது கொள்கையிலிருந்து 'பிடிப்பு' தளராமலிருப்பதை நான் பெருமையாகக் கொள்வது போலவே, நானும் எனது கொள்கையிலிருந்து 'பிடிப்பு' தளராமலிருப்பதை அவர் பாராட்டுவார் என்றே கருதுகிறேன்.

அவர் உபதேசம்

"அவர், 'இப்படிப்பட்ட விழாக்களில் அரசியல் கருத்துக்களைப் பேசவேண்டாம்' என்று கூறினார்; ஆனால் இப்படிக் கூறியதற்குக் காரணம், பாதுகாப்பு உணர்ச்சி என்றே கருதுகிறேன். ஆனால் அவரே, 'கைத்தறியாளர் நிலை பத்து ஆண்டுகளுக்கு முன்பிருந்ததுபோல் இல்லை—முன்னேறியிருக்கிறது; சர்க்கார் கைத்தறியாளரின் துயர்துடைக்க தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்' என்றும் கூறினார்.

"இப்படிக் கூறுவதின் மூலம் அவர், சர்க்காரையும் பாராட்டுகிறார்; அந்தச் சர்க்காரை அமைத்திருப்பது தனது காங்கிரஸ் கட்சி என்று எண்ணியும் மகிழ்கிறார். இந்தச் சௌகரியமான நிலையில் நான் இல்லை.

கீர்த்தியும்—நேர்த்தியும்

"தமிழர்களுக்குக் கீர்த்தி அளித்துவந்த தொழில்களுள் இந்தக் கைத்தறித் தொழில் மிக முக்கியமானதாகும்.

"இன்று அடையமுடியாத நேர்த்தியை, அன்று—பண்டைய காலத்தில் இந்தத் தொழில் பெற்றிருந்ததாக நமக்கு நமது இலக்கியங்கள் கூறுகின்றன.

இன்றைய ஏக்கம் அன்று இல்லை

"இன்று, 'நமது துணிகளுக்கு வெளிநாடுகளில் மார்க்கெட் கிடைக்குமா?' என்று ஏங்குகிறோம் நாம்! ஆனால் அன்று, தமிழ்நாட்டை உலகத்திற்கு அறிவிப்பதற்குக் கடல் முத்தும் காட்டுச் சந்தனமும், இந்தக் கைத்தறியும்தான் பயன்பட்டன!

"தமிழகம் உலகத்தோடு கொண்டிருந்த தொடர்புக்கு, இந்தக் கைத்தறிதான் முக்கிய காரணம் என்ற அதன் அருமை பெருமைகளை நமது இலக்கியங்கள் நமக்கு அழகுற எடுத்துச்சொல்லுகின்றன.

"அந்த நாளில் கைத்தறியாளர், இழைகளைப் பயன்படுத்திய விதம் குறித்து நமது சிலப்பதிகாரம் கூறுகிறது; ஒருவகைக் காட்டு எலியின் ரோமத்திலிருந்து கூடத் துணி நெய்திருக்கின்றனர் அன்றைய தமிழர். நமக்கு அது வியப்பு அளிப்பதாக இருக்கலாம்.

"அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்தத் தொழில் இடைக்காலத்தில் பட்டுப் போய்விட்டது.

முன்னைய நிலையிலிருந்து முன்னேற்றமா?

"தலைவர் அவர்கள், கைத்தறி 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையைவிட இன்று முன்னேறியிருக்கிறது என்று கூறினார்.

"இது எப்படி இருக்கிறது என்றால், 40 நாள் டைபாயிட் சுரத்திலிருந்தவன், இரண்டொரு நாளாக எழுந்து நடமாடும்போது, 'முன்னைவிட நன்றாகிவிட்டாயே,' என்று கூறுவதுபோலிருக்கிறது!

"சுரத்தால் பாதிக்கப்பட்டிருந்த போதைவிட, எழுந்து நடமாடும்போது நன்றாக இருக்கிறது உடல்நலம் என்பதை நான் ஒப்புகிறேன். ஆனால், அவன் பழைய வலிவும் பொலிவும் பெற்றுவிட்டான் என்று கூறுவதை நான் ஏற்கமுடியாது. அதுபோலவே, நலிவுற்ற கால நிலையைவிட இப்போது கைத்தறி நன்றாக இருக்கிறது என்பது, கைத்தறியின் பழைய நிலையை அடைந்துவிட்டது என்று கூறுவதாக இருக்கமுடியாது.

"சுரத்திற்கு முன்பிருந்த நிலையை—முன்பிருந்த வலிவை ஒருவன் பெறும்போதுதான், அவன் பழைய நிலையை அடைந்துவிட்டான் என்று கூறுவதாக இருக்க முடியும். அதுபோலவே, கைத்தறி நெருக்கடிக்கு ஆளாகுமுன்னர், பண்டையத் தமிழக நிலையை இல்லாவிட்டாலும், யுத்த காலத்திற்கு முன்பு இருந்த நிலையையேனும் அடைந்துவிட்டதா என்றால், 'இல்லை' என்பதை நான் வருத்தத்துடன் கூறத்தான் வேண்டியிருக்கிறது.

பிரச்சினைகள் என்னென்ன?

"கைத்தறிக்கு இன்றுள்ள பிரச்சினைகள் என்னென்ன என்று ஆராயப்பட்டு, அவை மூன்று வகையானவை என்று காணப்பட்டுள்ளன.

ஒன்று—சில காலத்தில், கைத்தறியாளருக்கு நூல் கிடைப்பதில்லை; அவர்கள் விரும்புகிற வகையான நூல் தேவையான அளவு கிடைப்பதில்லை.

மற்றொன்று—அவர்கள் விரும்புகிற நூல் கிடைத்தாலும், வேலைக்குச் சரியான கூலி கிடைப்பதில்லை.

மூன்றாவது—நூலும் கிடைத்து கூலியும் கிடைத்தாலும், அவர்கள் நெய்து குவிக்கும் துணிகள், மலைமலையாகக் குவிந்துவிடுகின்றன; அவை செலவாகிற மார்க்கெட் கிடைப்பதில்லை.

பிச்சைக்காரர்களாயினர்

"இந்தப் பிரச்சினைகள், நெசவாளர்களை ஒவ்வொன்றாக சில நேரத்திலும், மொத்தமாகச் சில நேரத்திலும் தாக்குகின்றன.

"இதன் விளைவு, சில ஆண்டுகளுக்கு முன் சேலத்து நெசவாளி, இராசிபுரத்திலும், இராசிபுரத்து நெசவாளி காஞ்சீபுரத்திலும், காஞ்சீபுரம் நெசவாளி கோயில்பட்டியிலும், கோயில்பட்டி நெசவாளி மதுரையிலுமாக பிச்சைக்காரர்களாக்கப்பட்டனர். பலர்—மனைவியைப் பிரிந்தனர்; பலர்—குழந்தைகளை விற்றனர்! நிலைமை படுமோசமாயிற்று!

"அந்தநிலை வேண்டுமானால் இன்று இல்லை எனலாம். அவ்வளவே தவிர, அவர்களது பிரச்சினைகளுக்கு நிரந்தரமான பரிகாரம் தேடப்பட்டுவிட்டதா என்றால், இல்லை!

"அப்படி இருக்கும்போது, 'கைத்தறியாளர் நிலை முன்னேறிவிட்டது' என்று கூறுவது, நமது ஈவு இரக்கமற்ற மனத்திற்குச் சாந்தி தேடிக் கொள்ள வேண்டுமானால் பயன்படலாம்; அவ்வளவே தவிர வேறில்லை.

"நாம் இந்த நிலையை, மாற்றிவிட்டோம் என்று தன்னைத் தானே பாராட்டிக் கொள்ள வேண்டுமானால், சர்க்கார் அப்படிக் கூறலாமே தவிர வேறில்லை. யுத்தத்திற்கு முன்பிருந்த நிலையை கைத்தறி இன்னும் பெறவில்லை"

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்.]

கைத்தறியில் புதிய ரகங்கள்!

உருவாக்க நான்கு நிலையங்கள்

புதுடில்லி, மே 10—

கைத்தறி உற்பத்தியில் புதிய வண்ணங்கள், ரகங்கள் முதலியவைகளை உருவாக்குவதற்காக இந்தியாவில் நான்கு நிலையங்களை நிறுவுவதென அகில இந்திய கைத்தறி போர்டு முடிவு செய்திருப்பதாகவும், இவற்றில் மூன்று வடகாட்டிலும், ஒன்று சென்னையிலும் நிறுவப்படும் என்றும் பத்திரிகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

471 சோஷலிஸ்டுகள் கைதுசெய்யப்பட்டனராம்

இலக்குமணபுரி, மே 12—

இங்கு சோஷலிஸ்டுகள் நடத்திவரும் போராட்டத்தில் மொத்தம் 471 தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் தகவல் தந்திருக்கிறது.

புதுடில்லி, மே 13—

சென்ற ஆண்டில், கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக மொத்தம் ஏழு கோடி ரூபாய் மட்டுமே மத்திய அரசாங்கம் செலவிட்டுள்ளது என்று கைத்தறித் துணி இலாகா ஆணையாளர் நஞ்சப்பா கூறியுள்ளார்.

நம் நாடு

சென்னை 13—5—57 திங்கள்

மாணவர் உலக 'மனு முறை'

பொதுவாக இளைஞர்களிடத்திலும், குறிப்பாக மாணவர்கள்—ஆசிரியர்களிடத்திலும் 'நெருக்கமான தொடர்பு' கொள்ள வேண்டுமென காங்கிரசு மேலிடம் விரும்புகிறது. இளைஞர்களுக்கும் காங்கிரசுக் கட்சிக்கும் இருந்துவரும் உறவை வலிவுள்ளதாக்க வேண்டும் என்றும் அதே மேலிடம் பேரவா கொள்ளுகிறது.

அவ்விருப்பை உடனடியாக நிறைவேற்றவும், விளைவைக் கெட்டுவிடாது காத்து வரவும் ஒவ்வொரு பிரதேச காங்கிரசுக் குழுவும், ஒவ்வொரு முழுநேர ஊழியரை நியமித்துக்கொள்ள முன்வரவேண்டும் என்று அனைத்து இந்திய காங்கிரசுக் குழு முடிவுகட்டி இருக்கிறது. அவ்வாறு நியமிக்கப்படும் ஊழியருக்காகும் மாதச் செலவில் சரிபகுதித் தொகையை, தான் ஏற்றுக்கொள்ளுவதாகவும் குழு அறிவித்திருக்கிறது.

அனைத்திந்திய காங்கிரசுக் குழுவின் இம்முடிவை செயலாற்ற ஐந்து மாகாணக் காங்கிரசுக் குழு முனைந்துள்ளது. மற்ற மாகாணக் குழுக்களும், இனி இதை ஏற்றுச் செயலாற்றக்கூடும்.

காங்கிரசுக் கட்சிக்கும் இளைஞர்களுக்கும் இடையில் இருந்துவரும் உறவை மேலும் வலிவுள்ளதாக ஆக்குவது குறித்து, அனைத்திந்திய காங்கிரசுக் குழு பலமுறை தீவிரமாக ஆராய்ந்திருக்கிறது. இருந்தாலும், தேர்தலுக்குப் பிறகு, மேலும் அப்பணிக்கு முதலிடம் தரவேண்டும் என வற்புறுத்த அக்குழு முன்வந்து இருக்கிறது.

தேர்தல் நேரத்தில் பற்பல இடங்களில் காங்கிரசுக் கட்சிக்கு எதிராக மாணவர்கள் ஈடுபட்டதாக பண்டித நேரு கருத்தறிவித்துள்ளதின் எதிரொலியே இம்முடிவு என்று சொல்லப்படுகிறது. அதுவுமன்றி, காங்கிரசுக் கட்சி மாணவர் உறவை முறித்துக் கொண்டுவிட்டதாகவும், பொதுவாகக் காங்கிரசுக் கட்சியை மாணவர்கள் விரும்பினாலும் சில தலைவர்களிடை நம்பிக்கை இழந்துவிட்டிருப்பதாகவும் இந்தியப் பிரதமர் வெளிப்படையாகக் குறிப்பிட்டிருந்ததின் விளைவுதான் இம்முடிவு என்றும் உணர்த்தப்படுகிறது.

இளைஞர்களிடம் காங்கிரசுக் கட்சி புதிதாகத் தொடர்பேற்படுத்திக்கொள்ள முயற்சிப்பதையும், ஏற்கனவே இருந்த தொடர்பை மேலும் நெருக்கமுடையதாக ஆக்கிக்கொள்ளத் தீவிரம் காட்டுவதையும், ஒருவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். அதில் நியாய விரோதம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், உயர்நிலைப் பள்ளி-கல்லூரி மாணவர்கள்—ஆசிரியர்கள் இடையே 'மேலும் நெருக்கமான தொடர்பை' உருவாக்கக் காங்கிரசுக் கட்சி முன்வருவது, அது இதுவரை இத்துறையில் அளித்து வந்த போதனைகளுக்கு முற்றிலும் முரண்பட்டிருப்பதாகும். அரசியல் கட்சிகள், மாணவர்கள்—ஆசிரியர்களிடை தொடர்பு கொள்ளக்கூடாது எனக் காங்கிரசுத் தலைவர்கள் பலப்பட போதித்துவந்திருந்த போதிலும்கூட, அக்கட்சித் தலைவர்கள் தங்கள் போதனையைப் பின்பற்றி செயலளவில் நடந்து கொண்டது கிடையாது. அதாவது போதித்து, வந்ததற்கு விரோதமாக, மாணவர்கள்—ஆசிரியர்கள் இடையே தங்கள் கட்சி ஆதிக்கத்தைச் செலுத்தி வருவதில் தீவிரமாக ஈடுபட்டு வந்துள்ளனர் காங்கிரசுத் தலைவர்கள்.

மாணவர்கள் — ஆசிரியர்கள் இடையே அரசியல் கட்சிகள் உறவு கொள்ளக் கூடாது எனப் பேசிக்கொண்டே, மேற்படி இருசாராரிடத்திலும் காங்கிரசுத் தலைவர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்ததற்கு ஒரே ஒரு நியாயந்தான் இருக்கமுடியும். அதாவது, மாணவர்கள்—ஆசிரியர்களிடை தாங்கள் இதுவரை செலுத்திவந்த ஆதிக்கத்தை மறைக்கவும், அவர்களை நெருங்கவிடாமல் மற்ற அரசியல் கட்சிகளைத் தடுத்து நிறுத்தவும், அதையும் உடைத்துக் கொண்டு ஒருவேளை அவர்களிடம் மற்ற அரசியல் கட்சிகள் கொள்ளக்கூடிய தொடர்பைப் பழிக்கவுமே, காங்கிரசுத் தலைவர்கள் மேற்கண்டவாறு முரண்பட செயல்பட்டு வந்திருக்கின்றனர். இதுதான், அவர்கள் முரண்பட்ட நடத்தையில் மறைந்திருக்கும் அடிப்படை நியாயமாகும்.

காங்கிரசு உள்ளிட்ட அரசியல் கட்சிகள் எதுவும் மாணவர்கள் — ஆசிரியர்களிடை தொடர்பு கொள்ளக்கூடாது எனப் பொதுவாக நியாயம் பேசவும், அதன்படி தாங்கள் செயலாற்றவும் காங்கிரசுத் தலைவர்கள் முன்வருவார்களானால் அது பாராட்டக்கூடியதாகும். ஆனால் காங்கிரசுத் தலைவர்களோ, மாணவர்கள்—ஆசிரியர்களிடை நெருக்கமான தொடர்பு கொள்ளும் உரிமை தங்களுக்கு மட்டுமே உண்டு, மற்ற கட்சிகளுக்குக் கிடையாது என்ற ஒருபட்ச நியாயம் பேசுகின்றனர்.

காங்கிரசுத் தலைவர்கள் கொண்டுள்ள இம்மனப்போக்கை விளக்க பண்டித நேருவின் கருத்தே போதுமான சான்றாகும். 'தேர்தல் காலத்தில் காங்கிரசுக் கட்சிக்கு எதிராக மாணவர்கள் வாக்காளர்களைத் திரட்டினர்—பேசினர்' என்று பண்டித நேரு கூறியுள்ளதின் உள்ளடக்கம் என்ன? 'தேர்தல் காலத்தில் காங்கிரசுக் கட்சிக்குச் சாதகமாக மாணவர்கள் வாக்குகளைத் திரட்ட வேண்டும்—காங்கிரசுக் கட்சி அபேட்சகர்களை ஆதரித்துப் பேச வேண்டும்; ஆனால் அதற்கு மாறாக காங்கிரசுக்கு எதிராக மாணவர்கள் நடந்து கொண்டு இருக்கின்றனர்; அது மாபெரும் தவறு—குற்றம்' எனக் காங்கிரசுத் தலைவர்களுக்கெல்லாம் பெருந் தலைவராக இருக்கின்ற பண்டித நேரு கருதுகிறார் என்ற உண்மைதானே, அவர் பேச்சின் உள்ளடக்கமாக அமைந்திருக்கிறது?

பொதுவாகக் காங்கிரசுக் கட்சிக்கு ஆதரவாளர்களாகவும், அதிலும் குறிப்பாகத் தேர்தல் காலத்தில் காங்கிரசு வெற்றிக்கு ஒத்துழைப்பாளர்களாகவும் மாணவர்கள் இருந்திருக்க வேண்டியதுதான் அவர்கள் கடமையாகும் என்ற கருத்துடன் நேரு இருந்துவருகிறார் என்ற உண்மையும் அல்லவா அவர் கூற்றிலிருந்து வெளியாகி இருக்கிறது? பண்டிதரின் இப்போக்கை, மாணவர் உலக 'மனு முறை' என்றுதான் பெயரிட வேண்டும்.

ஆந்திர மாநிலத்தில் 'காங்கர்' படிவங்கள்

33 ஏகரா பரப்பளவில் காணப்படுகிறதாம்

ஆந்திர மாநிலத்தில், கிழக்குக் கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த பத்ராசலம் தாலுகாவில், 33 ஏகரா பரப்பளவில், சுமார் 3,00,200 டன் 'காங்கர்' சுண்ணாம்புக்கல் படிவங்கள் காணப்படுகின்றனவாம்.

அக்கினிப் படிவங்கள் மிகவும் உயர்ந்ததாகவும், சிமெண்டு உற்பத்திக்கு ஏற்றதாகவும் இருக்கிறதாம்.

விஞ்ஞானம் மனிதனுக்கு இன்பத்தைத் தருமா?

ஜப்பானிய அறிஞர் ஒருவரின் புதிய கண்ணோட்டம்

விஞ்ஞானத்தைப் பல துறைகளாகப் பிரித்ததால், அந்தந்தத் துறையிலே தனித் தேர்ச்சி அடைந்தோர் பலர் தோன்றினர்; நுணுகி ஆராய்ந்து, நம்பத்தகுந்த செய்திகளையும் நுட்பங்களையும் கண்டனர். மனிதன் கண்ட இயந்திர வகைகள் பெருகப் பெருக, ஒவ்வொன்றும் சிக்கலானதாயிற்று. இந்த இயந்திரங்களைப் பயன்படுத்தியவர்கள் இவற்றின் சூட்சுமங்களை முழுதும் அறிவது தொல்லை என்று கண்டு, வேறு வழியின்றி, அறியாமலே அவற்றைப் பயன்படுத்தலாயினர்; பயனுள்ளவை என்ற ஒரே காரணத்துக்காக அவற்றைப் பயன்படுத்தினர். இயந்திரங்களை வேலை வாங்குவதாக நம்பும் மனிதன், அவற்றின் உதவியின்றி வாழ முடியாதவனாக மாறி வருகிறான். மனிதன் செய்யும் பல வேலைகளை இயந்திரங்கள் செய்யும்படி விட்டு விடுவதும், மனிதனுக்கு அவை துணையாக இருந்து மனிதனுடைய செயல்கள் பெருகுவதும் நல்லதுதான்; எனினும், மனிதனுடைய அறிவு செய்ய வேண்டிய வேலையை, வரவர இயந்திரங்களே செய்யலாயின், என்ன நேரிடும் என்பது நமக்குத் தெரிந்தாக வேண்டும்.

இவ்வகையான போக்குகளெல்லாம் பெருகிப் பெருகி, மனிதத் தன்மை சிதைந்து, கடைசியில் அது அறவே ஒழிந்தும் போகக் கூடும் என்ற நிலை ஏற்படாது என்று நாம் சொல்லமுடியாது. அவ்வாறு, மனிதத்தன்மையின் பல்வேறு அம்சங்களும் சிதையச் சிதைய, மனிதனின் இன்பமும் இல்லாது ஒழியும் என்பதையும் மறக்க இயலாது. விஞ்ஞானத்தால் மனிதனுக்கு இன்பமா என்பது இன்று பலருக்குச சந்தேகம் ஏற்படுகிறது; இதற்குத் துணிந்து விடை கூறுவது எளிதல்ல! 19-ம் நூற்றாண்டு மக்களைப் பற்றிச் சொல்வானேன்? இருபதாம் நூற்றாண்டில் வாழும் நமக்கே விஞ்ஞானத்தால் மனிதனுக்கு இன்பந்தான் என்று திட்டவட்டமாகச் சொல்ல இயலாது.

விஞ்ஞான முன்னேற்றத்தால் மனிதனுக்கு எப்போதும் இன்பமே உண்டாகும் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. இன்பமும் செழிப்பும் பொங்குவதற்கு வழி பிறக்கலாம்; அல்லது மனித இனம் பாழாகி மனிதத் தன்மையும் ஒழிவதற்கு வழி கண்டுபிடிக்கலாம்.

மனிதன் வெறும் பகுத்தறிவினால் எண்ணிச் செயலாற்றுவதில்லை; எனினும் நாம், நமக்கிருக்கும் பகுத்தறிவைப் பயன்படுத்த முடியாது என்பது அல்ல; அதற்கு மாறாக, நம்முடைய பகுத்தறிவு இன்னும் ஆழமாகச் சென்று நம்முடைய மனத்தை அறியவேண்டும்; அங்கே புதைந்து கிடப்பவற்றைத் துலங்கும்படி புலப்படுத்தவேண்டும்.

இனி வருங்காலத்தில் மனிதத் தன்மை அழிந்தொழிந்து போகாமல் இவ்வாறு முயற்சி செய்து உலகைக் காக்கும் வழியில் நடப்போம்.''

மாணவர்களையும் ஆசிரியர்களையும் அரசியலில் ஈடுபடுத்தலாமா?

பொறுப்புள்ள தலைவர்கள் சிந்திக்க வேண்டும்

காங்கிரசின் 'பொறுப்பற்ற யோசனை'க்குக் கண்டனம்

''பொதுவாக இளைஞர்களுடன் இடைநிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் இவர்களுடனும் நெருங்கிய தொடர்புகொள்ள இனி மாநிலக் காங்கிரஸ் கமிட்டிகள் விசேட நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமென்று அறிவிக்கப்படுகிறது. இது, குறிப்பாக மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறைகொண்ட அனைவருக்கும் கலக்கமுண்டாக்கும்.

''படிப்பு முடிந்த வாலிபர்கள் தங்கள் இஷ்டம்போல் அரசியலில் ஈடுபடுவது முற்றிலும் பொருத்தமே! ஆனால், மாணவர்களாயுள்ள இளைஞர்களை—அதாவது, பள்ளிகளில் அல்லது கல்லூரிகளில் படித்துக்கொண்டு வரும் சிறுவர்களை அரசியலில் சிக்க வைக்கக்கூடாது; அவ்வாறு செய்வது அவர்களுடைய படிப்பைப் பாழாக்கிவிடும் என்பதை, பொதுவாழ்வில் முன்னணியிலுள்ள பலரும் வலியுறுத்தி வந்திருக்கின்றனர்.

''மாணவர்கள் மட்டுமின்றி, ஆசிரியர்களும் அரசியலில் தீவிரப் பங்கு எடுத்துக்கொள்ளாதிருந்தாலேயே அவர்கள், தங்களுக்குள்ள பொறுப்பை சீரான முறையில் நிறைவேற்றிவைக்க முடியும்.

''ஆனால், ஏற்கனவே ஆசிரியர்கள் சிலர் தங்கள் கடமையை மறந்து, அரசியல் விருப்பு-வெறுப்புகளில் மும்முரமாக ஈடுபட்டு, அவற்றைப் பள்ளிக்கூடங்களுக்குள்ளே சிறுவர்களின் பிஞ்சு மனத்தில் புகுத்துவதைப்பார்த்து வருகிறோம்.

''இனி காங்கிரஸ், மேற்குறித்தவாறு மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் நேரடியான தொடர்பு கொண்டு அவர்களைத் தனது கட்சி அரசியலில் ஈடுபடுத்துமாயின் அதன் விளைவு யாதாயிருக்குமென்று பொறுப்புள்ள காங்கிரஸ் தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

''காங்கிரசின் புது முயற்சியைப் பார்த்துக்கொண்டு மற்றக் கட்சிகள் வாளாவிருந்து கொண்டிரா! அவைகளும் பகிரங்கமாக ஆசிரியர்களையும், மாணவர்களையும் தத்தம் கட்சிகளில் சேர்க்க முற்படுவது இயற்கை. அந்நிலையில், பள்ளிக்கூடங்களோ, கல்லூரிகளோ, மேற்கொண்டு அப்பெயருக்குரியவையாயிரா! அவையெல்லாம் அரசியல் வாக்குவாத மேடைகளாகிவிடக்கூடும்.

''முன்பு காந்திஜியின் தலைமையில் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் மாணவர்களும், ஆசிரியர்களும் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டதைச் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். அப்போது நடந்த ஒத்துழையாமையோ, மறியலோ, சத்தியாக்கிரகமோ அந்நிலைக்குப் பொருத்தமானவை. அப்போது அந்நியர் ஆண்டுவந்த காலம். வியாதிக்கு மருந்து சாப்பிடுவதுண்டு; நோய் நீங்கிய நிலையிலும், பழைய மருந்துகளை ஏன் மேலும் உட்கொள்ளக் கூடாது என்பது, அர்த்தமற்ற கேள்வி!

''ஆனால், 'சமீபப் பொதுத் தேர்தலில் மற்றக் கட்சிகள் மாணவர்களைக் காங்கிரசுக்கு எதிராக உபயோகித்து வந்திருப்பதால் இனி அதற்கு இடந்தரக் கூடாது; அவர்களை எப்படியாவது தங்கள் பக்கம் இழுத்துக் கொண்டுவிடவேண்டும்,' என்று காங்கிரஸ் பிரமுகர்கள் கருதுவதாகத் தெரிகிறது. மற்றக் கட்சிகள்மீது அவர்கள் கூறும் பழி உண்மையாயிருக்கலாம்; ஆனால், அதற்குப் பரிகாரம், காங்கிரசும் அதே வழியைப் பின்பற்றுவதல்ல!

''எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து, இனி மாணவர்களையோ ஆசிரியர்களையோ கட்சி அரசியலில் ஈடுபடுத்துவதில்லை என்று ஒரு உடன்பாட்டுக்குவர வழி செய்வதே நிலையான பரிகாரம். அப்போதுதான், கல்விச்சாலைகளில் கல்வி போதனை சீராக நடந்தேறுவதும், மாணவர்கள் தங்கள் படிப்பில் ஒருமுகமான கவனம் செலுத்துவதும் சாத்தியமாகும். இத்தகைய ஒரு உடன்பாட்டுக்கு வருவதில் மற்ற கட்சிகள் தயக்கம் காட்டலாம்.

''ஆனால், நமது இளஞ்சிறுவர்களின் நல்வாழ்வை முன்னிட்டு இத்துறையில் மற்ற அரசியல் கட்சிகளுக்கு வழிகாட்டியாக நடந்துகொள்ளவேண்டியது காங்கிரன் பொறுப்பு.''

—இவ்வாறு, 'பொறுப்பற்ற யோசனை' என்ற தலைப்பில், 9—5—57 'சுதேசமித்திரன்' இதழ் தனது தலையங்கத்தில் எழுதியிருக்கிறது.

மலேயாவின் புதிய அரசியல் சட்டம்

முதன் மந்திரி யோசனை

சிங்கப்பூர், மே 10—

சிங்கப்பூருக்கான புதிய அரசியல் திட்டத்தில், 'நாசவேலை'களில் ஈடுபட்டவர்கள் மக்கள் சபைத் தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்று கூறும் பிரிட்டிஷ் சர்க்கார் வற்புறுத்தும் ஒரு பிரிவு பற்றி என்ன செய்வது என்பதை விவாதிப்பதற்காக ஒரு சர்வ கட்சி மாநாடு கூட்டப்போவதாக, சிங்கப்பூர் முதல்வர் லிம்யீ-ஹாக் தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டனுடன் சிங்கப்பூர் சர்க்கார் அண்மையில் செய்து செய்துகொண்ட அரசியல் சட்டம் பற்றிய ஒப்பந்தத்தை, சிங்கப்பூர் சட்டசபை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், புதிய சிங்கப்பூர் பாராளுமன்றத் தேர்தலுக்கு, நாசவேலை நடவடிக்கைகளுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் போட்டியிடக் கூடாது என்ற பிரிட்டன் விதிக்கும் தகராறுக்குரிய நிபந்தனையை ஏற்க சட்டசபை மறுத்துவிட்டிருக்கிறது என்ற செய்தி ஏற்கனவே வந்திருக்கிறது.

1956-ல் இன்ஷ்யூரன்ஸ் தொழில் மந்தமடைந்துள்ளதென்றும், மொத்தம் ரூ. 200 - கோடிக்கே வியாபாரம் நடைபெற்றுள்ளதென்றும், 1955-ல் ரூ. 268 கோடிக்கு இன்ஷ்யூர் செய்யப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மே தினக் கொண்டாட்டத்தில் கழகம் பற்றிய பங்கு!

தமிழகமெங்கும் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள்

தொழிலாளருக்கு தன்னம்பிக்கையூட்டும் பணியில் தோழர்கள்

பாட்டாளிப் பெருமக்களின் மே தின விழா, தமிழகமெங்கும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டிருக்கிறது; பட்டி-தொட்டிகளெங்கும் நடைபெற்ற இவ்விழா நிகழ்ச்சிகளில் தி. மு. கழகத் தோழர்கள் பெரும் பங்கேற்றிருக்கின்றனர்.

தி. மு. கழகங்கள், சார்பு மன்றங்கள் முதலானவைகளின் சார்பில் நடைபெற்ற இத்திருவிழா நிகழ்ச்சிகளின் விவரம் சுருக்கமாக இங்கு தரப்படுகிறது:—

வெள்ளியம்பாளையம்:

3—5—57 காலை 7-30 மணிக்கு சேலம் மாவட்டம்—வெள்ளியம்பாளையம் தி. மு. கழகச் சார்பில் தோழர் வி. ஏ. அலீம் தலைமையில் ஊர்வலமாகச் சென்றனர். பிற்பகல் 4½ மணியளவில் பொதுக்கூட்டம், தோழர் முகம்மது அனீப் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றியபின் மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டு தோழர் எஸ். கே. மைதீன் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

சங்கரபாண்டியபுரம்:

1—5—57 இரவு 8 மணியளவில் இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் அண்ணா திடலில் தோழர் க. இராமசாமி தலைமையில் மே தின விழா நடைபெற்றது; தோழர்கள் ச. முத்துசாமி கொடியேற்றியபின், தோழர்கள் எம். எஸ். புரட்சிமணி, டி. கே. கே. சாமி, மணிமொழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருச்சி—உறந்தை:

1—5—57-ல் இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் மே தின விழாவினையொட்டி, தெருவின் முக்கிய இடங்களில் கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன. மாலை 7 மணிக்கு தோழர் ம. வேலு தலைமையில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, என். எஸ். இளங்கோ, எம். எஸ். மணி, எஸ். நெடுமாறன், அன்பில்-தருமலிங்கம் ஆகியோர் மே தினம் பற்றியும் கழகக் கொள்கைகளை விளக்கியும் பேசினர்.

சென்னை—சிந்தாதிரிப்பேட்டை:

2—5—57 மாலை 6 மணிக்கு சென்னை — சிந்தாதிரிப்பேட்டையில் தோழர் மயிலழகன் தலைமையில் வள்ளுவர் மன்றத் திறப்பு விழாவும், மே தின விழாவும் சிறப்புற நடைபெற்றது. வள்ளுவர் மன்றத்தைத் தோழர் கா. அப்பாதுரையார் அவர்கள் திறந்து வைத்ததும் இனிப்பு வழங்கப்பட்டது.

பின்னர் தோழியர் அலமேலு அப்பாதுரை, தோழர்கள் இறைமுடிமணி, ஆடலழகன், இரா. [illegible]ரைபாலன் ஆகியோர் மே தின விழா குறித்துப் பேசினர்.

[illegible]ரனூர்:

1—5—57 மாலை 4-மணிக்கு [illegible]ரனூர் தி. மு. க. மாணவர்கிளை [illegible]ர்வாகத்தில் 'அண்ணா படிப்பகம்' திறக்கப்பட்டது; மேதினத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டு கழகக் கொடி மரத்தில் புதுக்கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

குணியமுத்தூர்:

3—5—57 மாலை 7-30 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் மேதினவிழா கொண்டாடப்பட்டது. தோழர் தங்கமாணிக்கம் அனைவரையும் வரவேற்றார். தோழர் கே. ஏ. பி. முத்து தலைமையில், தோழர்கள் சண்முகநாதன், கி. மனோகரன், சே. அ. இராசமாணிக்கம் ஆகியோர் பேசினர்.

சிதம்பரம்:

1—5—57-ல் திரு. வி. ச. படிப்பகச் சொற்பயிற்சி மன்றச் சார்பில் மே தின விழா தோழர் ரா. தங்கசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பா. சுப்பையன், வெ. முருகேசன், பொ. கலிவரதன், வே. சுப்பராயலு, சி. பி. பாண்டியன் ஆகியோர் மே தின வரலாறு பற்றியும் தற்காலத் தொழிலாளர்கள் ஒற்றுமை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

கோபி—புதுப்பாளையம்:

7—5—57ல் இவ்வூர் காமாட்சியம்மன் கோவில் திடலில் புதுப்பாளையம் தி. மு. கழக சார்பில் மே தின பொதுக் கூட்டம் தோழர் ஜி. கே. சிகாமணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வெ. இரா. பெருமாள், ஜி. ஏ. வெங்கடாசலம், பு. கா. பழனியப்பன் மற்றும் பல தோழர்களும் மே தினம் குறித்து சொற்பொழிவாற்றினர்.

சென்னை—சேப்பாக்கம்:

1—5—57 காலை 8 மணிக்கு 40-வது வட்டம் 27, லாக் நகரில் சாமி படிப்பகப் பணி மனையில் மே தின விழா திரு. ச. செல்வண்டன் தலைமையில் நடைபெற்றது. திரு. கா. அப்பாதுரையார் அவர்கள் கழகக் கொடியேற்றிவைத்து, கே. வி. கே. சாமி தொழிலாளர்களுக்குப் பாடுபட்டதைப் பற்றியும் தொழிலாளர் விடுதலை பற்றியும் விரிவுரையாற்றினார். பின்னர் தோழியர் அலமேலு அப்பாதுரையார் அவர்கள் மே தினத்தின் அவசியத்தைக் குறித்துப் பேசியபின் அவ்வட்ட மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

திருவள்ளூர்:

1—5—57-ல் இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் மே தின விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எச். ஏ. கனி, டி. எத்துராசன் ஆகியோர் மேதினம் பற்றிப் பேசினர். கூட்டத்தில் புதிய காசு பற்றிய கண்டனத் தீர்மானமும் ஓர் அனுதாபத் தீர்மானமும் நிறைவேறியது.

சிர்காழிப்பாறை:

வால்பாறை வட்டம்—சிர்காழிப்பாறை தோட்டத் தொழிலாளர்கள், தோழர் இராயப்பன் தலைமையில், கழகக் கொடிகளுடனும்—இசைக் குழுவுடனும் ஊர்வலமாகச் சென்றனர். பின்னர், தோட்டத்திற்குப் பொதுவான பிரட்டுக்களத்தில், இசைக் கருவிகள் முழங்க—சிலம்ப விளையாட்டு— கும்மியடித்தல் — கழியில் விளையாட்டு—நகைச்சுவை உரையாடல் முதலியவைகளுடன், மேதின விழா துவங்கியது. தோழர் இராமையாதாஸ் கழகப் பண் பாடினார். தோழர் இராயப்பன் கொடியேற்றிவித்துச் சொற்பொழிவாற்றியபின் குழந்தைகளுக்கு மிட்டாய்—கடலை—பொரி வழங்கப்பட்டது. தோழர் இராயப்பனுக்குத் தொழிலாளர்கள் மலர் மாலைகள்—சரிகை மாலைகள்—கைத்தறி ஆடைகள் அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டனர்.

புதுவையில் மே தின விழா

பல்லாயிரக்கணக்கான மக்கள் கருத்துவிளக்கம்பெற்றனர்

1—5—57மாலை 6-30 மணிக்கு புதுவை ஒதியஞ்சாலைத் திடலில், பஞ்சாலைத் தொழிலாளர் சங்கச் சார்பில் மே விழாக் கூட்டம் வழக்கறிஞர் சு. பெருமாள் தலைமையில் நடைபெற்றது. தலைவரவர்கள் புதுவைத் தொழிலாளர் நிலை பற்றியும் ஆட்சியாளரால் புகுத்தப்பட்ட 'அவார்டு' முறையால் ஏற்பட்டுள்ள பாதகங்களையும் விளக்கிப் பேசினார்.

பின், தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள், புதுவையில் தொழிலாளர்கள் இன்றுவரை கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஏணியாகவே பயன்பட்டு வருகிறார்கள் என்றும் இதனால் தொழிலாள வர்க்கத்தின் நியாயமான உரிமைகளைப் பெற முடியவில்லை என்றும் இனியும் அவ்வாறு இருப்பது சரியல்லவென்றும் பேசினார்-

அடுத்து, தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தொழிலாளர் நலனில் தி. மு- கழகத்தின் பங்கு பற்றி விரிவாகப் பேசினார்.

புதுவை தி. மு. கழகம்:

5—5—57 இரவு 7 மணிக்கு புதுவை செஞ்சிச்சாலைத் திடலில் புதுவை தி. மு. கழகச் சார்பில் மே விழாக் கூட்டம் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அ. பொன்னம்பலனார், எம். எஸ். இராமசாமி ஆகியோர் மே விழா குறித்தும் தி. மு. கழகத்தின் இலட்சியம் பற்றியும் பேசினர். பல்லாயிரக்கணக்கான மக்கள் கருத்துரை கேட்டுத் திரும்பினர்,

சென்னை-இராயப்பேட்டை:

1—5—57 காலை 7 மணிக்கு இராயப்பேட்டை முத்தமிழ் முன்னேற்ற மன்றத்தில் (37-வது வட்டம்) மேதினவிழா நடைபெற்றபோது, தோழர் த. ச. சந்திரன் அவர்களால் தி. மு. கழகக் கொடியேற்றுவிழாவும், பகல் 12-மணிக்கு தோழர் சி. வெங்கடேசன் அவர்கள் தலைமையில் ஏழைகளுக்கு உணவும் அளிக்கப்பட்டது.

டால்சேர் காலரி:

1—5—57 மாலை 6-மணிக்கு ஒரிசா மாநிலத்திலுள்ள டால்சேர் காலரியில், மேதினத்தை முன்னிட்டு, 'டால்சேர் நிலக்கரி வயல் சமூக சேவா சங்கம்' சார்பில் ஏழைச் சிறுவர்களுக்கு திரு. எ. சங்கர் அன்பளிப்பாகத் தந்த துணிகளை திரு. கே. சண்முகவேல் முன்னிலையில் வழங்கப்பட்டது. விழாவில் திரளான பொது மக்கள் கலந்துகொண்டதுடன், இங்குள்ள தொழிற்சங்க தலைவர், செயலாளர் ஆகியோரும் விழாவிற்கு வருகைதந்து மேதினத்தைப்பற்றியும் சமூக சேவையைப் பற்றியும் தமிழ், இந்தி, ஒரியாவிலும் சொற்பொழிவாற்றி சிறப்பித்தனர்.

சென்னை 9-வதுவட்டம்:

1-5-57-ல் மேதின விழாவை முன்னிட்டு சென்னை 9-வதுவட்டம் 'அண்ணா அறிவகத்தின் சார்பிலும், மேற்படி வட்ட தி-மு. கழகத் தோழர்களின் சார்பிலும் தோழர் மே. துரை முன்னிலையில் அம்மன்கோயில் தெரு (ஏழுகிணறு மார்க்கெட் எதிரில்) வில் பொதுமக்களுக்கு குளிர்ந்த மோர் வழங்கப்பட்டது.

செந்தலிர்புரம்:

1—5—57-ல் மேதினவிழா கே. வி. கே. சாமி படிப்பகத்தில் கொண்டாடப்பட்ட போது, தோழர் கே. குலாம் மைதீன் கொடியேற்றிவைத்து மேதினம் பற்றிப் பேசினார். பின்னர், தோழர்கள் எ. ஜான், து. கோவிந்தாசன், மாசிலாமணி, மருதநாயகம் ஆகியோர் பேசினர்.

இலங்கையில் மாபெரும் ஊர்வலம்

உழைப்புக்கு மதிப்பு அளிக்கக் கோரிக்கை

5—5—57 மாலை 4-மணிக்கு இலங்கை—யாழ்ப்பாணம் தி. மு. கழகச் சார்பில், கழகப் பணிமனையிலிருந்து தோழர் இரா. அதிமணி தலைமையில், மேதின விழாவை முன்னிட்டு ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு 6-30 மணியளவில் கோட்டை முற்றவெளி மைதானம் வந்தடைந்தது. அங்கு துவங்கிய மேதின விழாப் பொதுக்கூட்டத்திற்கு தோழர் இரா. திருமறவன் தலைமை வகித்தார். அவர் தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:—

"உலகம் உய்ய உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தை பகைத்தவர்கள்-ஏமாற்றி பிழைத்தவர்கள் உயர்ந்து வாழ்ந்ததாக உலக சரித்திரங்கள் ஒன்றும் கூறவில்லை. பண்டை எகிப்திய பழங்குடி மக்கள்—கலைச்சிறப்பு வாய்ந்த கிரேக்கர்கள்—போர் வீரமிக்க உரோமர்கள் இவர்கள் உழைப்பின் தன்மையையும் — மேன்மையையும் மதியாததால்தான் அழிந்துபட்டனர் என்று வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

இந்தப் புனிதமான மேதின விழாவிலே, ஏழை எளிய பாட்டாளி மக்களை நசுக்கி வாழ முயன்று கொண்டிருக்கும் முதலாளி வர்க்கத்தை ஒரு கணம் அந்த வரலாற்றை எண்ணிப் பார்க்குமாறு இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் அடக்கி ஆள்வோருக்கு நினைவுறுத்துகிறது"

பின்னர், கொழும்பு தலைமைக் கழகச் சார்பில் தோழர்கள் ஏ. இளஞ்செழியன், கா. சு. சுந்தரராசன், இரா. அதிமணி, எஸ். ஆள்வார், ஆகியோரும் தோழர்கள் இராமமூர்த்தி, சிங்கமாறன், சீனிவாசன் ஆகியோரும் மேதினத்தைப்பற்றிய பல அரிய கருத்துரைகளை வழங்கினர்.

இறுதியில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, வேலைநிறுத்தம் செய்துவரும் தொழிலாளர்களுக்கு கூட்டத்தில் நிதிவசூல் செய்து கொடுக்கப்பட்டது.

உடுமலை:

1—5—57 மாலை 3-மணிக்கு தாரை-தப்பட்டைமுழங்க, சிலம்ப விளையாட்டுடன் ஓர் மாபெரும் ஊர்வலம் வெஞ்சமடையிலிருந்து புறப்பட்டு நகரின் முக்கிய தெரு வழியாகச் சென்று கொடியேற்று விழா நடத்திவிட்டு, மாலை 7 மணிக்கு திடலை அடைந்தது. தோழர் கோவிந்தசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் காளிமுத்து, பொன்னுசாமி, புலவர் பண்ணன் ஆகியோர் பேசினர். விழாவில் பல மன்றங்கள், தி. மு. கழகங்கள் பங்கேற்றன.

'கிராக்கி'ப்படி உயர்த்தப்படுகிறது

நகரசபையின் முடிவு

சென்னை, மே 10—

சென்னை நகரசபையிலுள்ள ஊழியர்களுக்குப் புதிய விகிதங்களில் கிராக்கிப்படி உயர்த்தித் தர முடிவு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்படும் விகிதங்களில் கிராக்கிப்படி தரப்படுமாம்.

சமீபத்தில் அரசாங்கம் தனது ஊழியர்களுக்கு ரூ. 7 கிராக்கிப்படி உயர்த்தியுள்ளது; இதே விகிதத்தில் நகரசபை ஊழியர்களுக்கும் தரப்படுமாம். 1957-58-ம் ஆண்டில் செலவாகும் அதிகப்படியான செலவில் ஒரு பகுதியை மத்திய அரசாங்கம் தர முன்வந்துள்ளதாம்.

இந்த கிராக்கிப்படி உயர்வினால் சென்னை நகரசபைக்கு மொத்தம் ரூ. 14 இலட்சம் செலவாகுமாம்.

நான்கு ஆண்டுகளில் 46,000 தமிழர்கள்!

இலங்கையிலிருந்து வெளியேறினர்

கொழும்பு, மே 9—

இலங்கையிலிருந்து கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் மட்டும் 46,000 'இந்தியர்'கள் (தமிழர்கள்) வெளியேறியுள்ளனர் என்றும், இவர்களில் பலர், 'வெளியேறுக' என்று இலங்கை சர்க்கார் பிறப்பித்த நோட்டீசுகளாலும், 'இனி நமக்கு இங்கு வாழ்வில்லை' என்ற எண்ணிய காரணத்தாலும் வெளியேறியவர்கள் என்றும் தெரியவருகிறது.

1954-ம் ஆண்டில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட நேரத்தில் 80 ஆயிரம் 'இந்தியர்'கள் தற்காலிகமான குடியிருப்பு பெர்மிட் வைத்துக்கொண்டிருந்தனர் என்று கணக்கிடப்பட்டிருந்ததாம்.

இவர்களில் பலருக்கு இன்னும் வெளியேற்ற நோட்டீஸ் தர முடியாமல் தாங்கள் கஷ்டப்படுவதாக இலங்கை சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

2 கோடி மக்களைப் பலிகொண்ட நோய்!

தீர்த்துக் கட்டுவதில் டாக்டர்கள் தீவிரம்

50 ஆண்டுகளுக்கு முன்னர் வெற்றியுடன் சிகிச்சை அளிக்க முடியாமல் இருந்த 17விதமுள்ள நோய்களைத் தற்பொழுது தடை செய்ய முடியும். நீரிழிவு நோய், இரத்தச் சோகை, மலேரியா ஆகிய சடந்தகால பெரும் மருத்துவப் பிரச்சினைகளில் இவை அடங்கியுள்ளன.

க்ஷயரோகநோய், பிறப்பு முதல் இருக்கும் இருதய நோய், வாயு சம்பந்தமான காய்ச்சல் போன்ற மேலும் 30 பிணிகளைத் தற்போது சிறிது தடை செய்யலாமென்றும், அவைகள்மீது வெற்றி அடைவது சமீபத்தில் கைகூடுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புற்றுநோயும், மன நோயும் தீர்க்க முடியாத பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. கிருமி நாசினிகள், பிரத்தியேக இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றின் அபிவிருத்தியால், கிருமியால் பரவும் நோய்கள்மீது கிடைத்த வெற்றிகள்தான் கடந்த 50 ஆண்டுகளின் மிகக் கவர்ச்சிகரமான மருத்துவ முன்னேற்றங்களாகும்.

நிமோனியா, க்ஷயம், மெனின்ஜிட்டிஸ் போன்ற—உயிருக்கே ஆபத்து விளைவிப்பதாக இருந்த நோய்களைத் தடை செய்து, சிகிச்சை அளிக்க இப்புதிய மருந்துகள் மூலம் வசதி ஏற்பட்டுள்ளது.

நச்சு நோய்களுக்கு எதிராக நடத்தும் போராட்டம் நன்கு நடைபெறுகிறது. உலகம் முழுமையிலுமாக 1918-ம் ஆண்டில் சுமார் இரண்டு கோடி மக்கள் இன்புளுயன்சா காய்ச்சலால் இறந்தனர் என்பதிலிருந்து இத்தகைய நோய்களின் ஆபத்து புலனாகின்றது.

மனிதனைப் பாதிக்கும் 50-க்கும் அதிகமான நச்சு நோய்களில் ஏதாவது ஒன்றினால் பாதிக்கப்பட்டு, தம் வாழ்க்கைக்காலத்தின் 10 சதவிகிதத்தை பலர் கழிக்கின்றனர். இவைகளில் பெரிய அம்மை, மஞ்சள் காய்ச்சல், நாய்க்கடி வியாதி, இன்புளுயன்சா, இளம்பிள்ளை வாதம் ஆகிய ஐந்து நோய்களை இப்போது தடை செய்ய முடியும்.

நச்சு நோய்களில் ஒன்றுக்கும் குறிப்பிட்ட சிகிச்சை கிடையாது; கிருமி நாசினிகள் பயன்படுவதில்லை. புதியவையும் பயன்படக்கூடியவையுமான குணமளிக்கும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு தற்பொழுது பரீட்சார்த்தமாக உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

உணர்வு பெறுகிறதா தமிழ்நாடு காங்கிரஸ்?

மாநிலத்தில் கனரகத் தொழில் வேண்டுமெனக் கோரிக்கை

சென்னை, மே 13—

தொழில்துறை வளர்ச்சியில் தமிழ்நாடு பின்தங்கிக் கிடக்கிறது என்ற உண்மையும், தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் அனைத்தும் வடநாட்டிலேயே அமுல்செய்யப்படுகின்றன என்ற உண்மையும், இப்போதுதான், நமது தமிழ்நாடு காங்கிரசிற்கு புலப்பட்டுள்ளது போலும்!

நேற்று எற்காட்டில் கூடிய போது, தமிழ்நாடு காங்கிரசார், 'தமிழ் நாட்டில் சேலத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலை அமைப்பது உள்ளிட்ட பல கனரகத் தொழில்களை நிறுவுமாறு, டில்லி சர்க்காரை வற்புறுத்துவதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

மேலும், நவீன கால விஞ்ஞானமுறை விவசாயத்தின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, மாதிரி விவசாயப் பண்ணைகளைத் துவக்குமாறும் மாநில சர்க்காரைக் கேட்டிருக்கின்றனராம்.

புதிய தலைவர்

தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக திருமங்கலம் கே. ராஜாராம் நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவரோடு போட்டியிட்ட கே. டி. கோசல்ராம் போட்டியிலிருந்து விலகிக் கொண்டிருக்கிறார்.

கக்கன் மந்திரியானதினால், புதிய தலைவர் தேர்வு நடைபெற்றுள்ளது.

ராஜாராம் நாயுடு, ஆச்சாரியார் மந்திரி சபையில் மந்திரியாயிருந்தார். கடந்த சட்டசபையில் சர்க்கார் 'கொறடா'வாக இருந்தார் நடைபெற்ற தேர்தலில், திருமங்கலம் தொகுதியில் தோல்விகண்டார்.

மு. கருணாநிதி

அவர்களுக்கு

முசிறி — மேட்டுப்பாளையம் ஊராண்மைக் கழக வரவேற்பு

மேட்டுப்பாளையம், மே 10—

முசிறி வட்டம்—மேட்டுப்பாளையம் ஊராண்மைக் கழகக் கூட்டம் தலைவர் திரு. பி. இராமநாதன் தலைமை நடைபெற்றது. அதுபோது, தோழர் கே. முருகன் முன்மொழிய தோழர் மருதமுத்து அவர்களால் (துணைத் தலைவர்) வழிமொழியப்பட்டு, தோழர் மு. கருணாநிதிக்கு வரவேற்பளிப்பதென ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், இவ்வூராண்மைக் கழகத்திற்கு 'நம் நாடு', 'திராவிட நாடு' ஆகிய பத்திரிகைகள் வாங்குவதெனவும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. (ந.-கி.)

தொழிற்கல்வி நிலையங்கள்

உதவித் தொகையைக் குறைத்துக் கொள்ளும் டெல்லியின் போக்கு

மந்திரி வெங்கட்ராமன் தரும் தகவல்

சேலம், மே 13—

சென்னை மாநில சர்க்கார் தொழில் இலாகா அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள், 10-ந் தேதியன்று சேலம் கலெக்டர் காரியாலயத்தில் நகரப் பிரமுகர்களடங்கிய ஒரு மாநாட்டில் பேசினார். இம்மாநாட்டில் சேலம் மாவட்ட கலெக்டர் எம். ஜி. பாலசுப்பிரமணியம், மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சென்னை மாநிலத்தில் ஐந்து தொழிற் கல்விப் பள்ளிகள் ஏற்படுத்த இந்தியப் பேரரசு அனுமதி வழங்கியுள்ளது. ஒரு தொழிற் கல்விப் பள்ளிக்கூடம் நிறுவ ரூ. 15 இலட்சம் தேவைப்படுகிறது. இதில், மூன்றில் இரண்டு பங்குத் தொகையை இந்தியப் பேரரசு வழங்கவும், மீதி ஒரு பங்குத் தொகையை மாநில அரசியலாரும் — பொதுமக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் முன்பு இந்தியப் பேரரசு கொள்கை வகுத்திருந்தது.

"ஆனால், அந்தக் கொள்கையை இப்பொழுது இந்தியப் பேரரசினர் மாற்றி அமைத்திருக்கின்றனர். தொழிற் கல்வி பள்ளிக்கூடம் நிறுவ மொத்த செலவில் பாதித் தொகையை மத்தியப் பேரரசும், மீதிப் பாதித் தொகையை மாநில அரசியலாரும்—மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்; இதுவே இந்தியப் பேரரசின் புதுக் கொள்கை.

"ஆகவே, தொழிற் கல்வி பள்ளிக்கூடம் நிறுவ பொதுமக்கள் தங்கள் பங்குத் தொகையான ரூ. 3¾ இலட்சத்தை நன்கொடையாக வழங்கவேண்டும். அது தவிர, தொழிற்கல்விப் பள்ளிக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் ரூ. 31,000 வருமானம் தருவதற்காக ரூ. 5 இலட்சம் பாதுகாப்பு நிதியையும் பொதுமக்கள் வழங்க வேண்டும்." சேலத்தில் தொழிற் கல்வி பள்ளிக்கூடம் நிறுவ பி. எஸ். வி. இராமனுசம் செட்டியார் ரூ. 1¼ இலட்சம் வழங்கியுள்ளார். முன்பு மத்திய பேரரசினர் வகுத்திருந்த கொள்கைப்படி பொதுமக்கள் ரூ. 2½ இலட்சம் நன்கொடை கொடுத்தால் அதைக் கொண்டே தொழிற் கல்வி பள்ளிக்கூடத்தை சர்க்கார் ஆரம்பிக்க வேண்டும் என்றும், புதியக் கொள்கைப்படி ரூ. 3¾ இலட்ச மக்கள் நன்கொடையாக கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தக்கூடாது என்றும் மக்கள் சபை உறுப்பினர் டி. எஸ். பட்டாபிராமன், மற்றும் பலரும் மந்திரியை கேட்டுக்கொண்டனர்.

தோற்றவர்களுக்குக் கவர்னர் பதவியா?

பொறுப்புள்ள வட்டாரங்கள் சிந்திக்கின்றனவாம்!

புதுடில்லி, மே 13—

நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் ஆதரவை இழந்து தோற்ற வி. வி. கிரி, படாஸ்கர் போன்றவர்களுக்குக் கவர்னர் பதவி அளிக்கலாமா என்ற பிரச்சினை பற்றி பொறுப்புள்ள வட்டாரங்கள் சிந்தித்து வருகின்றனவாம்.

மெஹ்பூப் நகர் இரயில் விபத்து

பெரிய அதிகாரிகளே பொறுப்பு என விசாரணைக் குழு தீர்ப்பு

டெல்லி சர்க்கார் தீர்ப்பை ஏற்க மறுக்கிறதாம்

புதுடில்லி, மே 12—

'மெஹ்பூப் நகர் இரயில் விபத்திற்கு மத்திய இரயில்வே நிர்வாகமே பொறுப்பு' என்று நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு தீர்ப்புத் தந்திருக்கிறது.

பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதி, விசாரணைக் குழுவிலிருந்து இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார். "1954-ல் ஜான்சன் விபத்து நடைபெற்றப் பிறகு, 299-ம் எண்ணுள்ள பாலம் ஏராளமான வெள்ளம் வரும்போதும், வெள்ளத்தை வடிக்கக்கூடிய வகையில் பெரிதாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதைச் செய்யாதது இரயில்வேயின் பெரிய எஞ்சினியர்களின் பொறுப்பற்ற போக்காகும்" என்று விசாரணைக் குழு கருத்தறிவித்திருக்கிறது.

விபத்திற்கு இரயில்வே நிர்வாகமே பொறுப்பு என்பது, விசாரணைக் குழுவின் தீர்ப்பு.

ஆனால், டெல்லி சர்க்கார் இந்தத் தீர்ப்பை ஏற்க மறுத்துள்ளது.

இரயில்வே இன்ஸ்பெக்டர் தமது விசாரணையின்போது, 'விபத்திற்கு எவருமே பொறுப்பில்லை' என்று கூறியிருந்த கருத்தையே சர்க்கார், ஏற்பதாகக் கூறியுள்ளனர்.

நிர்வாகத்தில் உள்ள ஒருவரின் தீர்ப்புக்கு மதிப்பளித்து, நீதிபதி ஒருவரின் தீர்ப்பை ஏற்கமறுக்கும் சர்க்கார், என்தான் இப்படி ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார்களோ தெரியவில்லை.

'நைஜீரியாவுக்கு சுதந்திரம் தேவை'

பிரதமர் கோரிக்கை

லண்டன், மே 13—

நைஜீரியாவுக்கு முழுச் சுதந்திரம் தேவை என்று பிரதமர் அவலோவா குறிப்பிட்டுள்ளார். இம்மாதம் 23-ந் தேதி நடைபெறவிருக்கும் சுதந்திரப் பேச்சுக்காக அவர் லண்டன் வந்துள்ளார்.

3,000 பேரைத் தூக்கிலிட ஏற்பாடாம்!

புடாபெஸ்ட், மே 10—

அங்கேரியில் நடைபெற்ற மக்கள் எழுச்சியின்போது, 3,000 கம்யூனிஸ்டுகளைப் போராட்ட வீரர்கள் கைது செய்திருந்தனராம்; நவம்பர் 4-ந் தேதி அவர்களை தூக்கிலிடவும் ஏற்பாடு செய்யப்பட்டதாம்; ஆனால், ரஷ்யப் படை தலையிட்டு அவர்களை மீட்டதாம்.

இந்தத் தகவலை அங்கேரிய பிரதமர் காதார் வெளியிட்டுள்ளார்.

ரூ. 122 கோடி செலவில் நாகார்சுனசாகர் திட்டம்

31,83,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்

புதுடில்லி, மே 11—

ஆந்திர மாநிலத்தில் உருவாகும் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 122·02 கோடி செலவிடப்படும்.

இங்கு ஏற்பாடாகியிருக்கும் மின்சாரத் திட்டத்திற்கு ரூ. 8·71 கோடி செலவிடப்படும்.

இந்தத் திட்டம் நிறைவேற குறைந்தது 9 ஆண்டுகள் பிடிக்குமாம்.

திட்டம் உருவாக்கப்பட்டதும் 31,83,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்குமாம்.

மூன்றாண்டுப் பட்டப் படிப்புத் திட்டம்

நாடு முழுமையிலும் அமுலாகும்?

புதுடில்லி, மே 12—

1957-58 கல்வி ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுப் பட்டப்படிப்பு நாடு முழுமையிலும் அமுல் செய்யப்பட வேண்டும் என்று கல்வி மதிப்பீடுக் குழு ஆலோசனை கூறியுள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் மொத்தம் 540 கல்லூரிகளில் புதிய திட்டம் அமுல் செய்யப்பட வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டிருக்கிறது.

இதற்கு இரண்டாவது திட்டத்தில் ரூ. 15 கோடியும், மூன்றாவது திட்டத்தில் ரூ. 10 கோடியும் செலவிடப்படலாம் என்றும் கூறியுள்ளது.

நாட்டில் தற்போது 250 இண்டர் வகுப்புக் கல்லூரிகளும், 500 பட்டப்படிப்புக் கல்லூரிகளும் உள்ளனவாம்.

அடுத்த ஆண்டு முதலில் 50 இண்டர் வகுப்புக் கல்லூரிகளிலும் 100 பட்டப்படிப்புக் கல்லூரிகளிலும் திட்டம் அமுல் செய்யப்படவேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டிருக்கிறது.

இந்தோனேஷியாவில் புதிய நெருக்கடி

சதித் திட்டமிட்டோர் கைது

ஜகார்தா, மே 11—

இந்தோனேஷிய அரசாங்கத்தைக் கவிழ்த்து, புதிய அரசியல் அமைப்பை ஏற்படுத்த முயன்றதாக சில இராணுவ அதிகாரிகள் உள்பட பலர் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இரகசியக் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளனர். ஆயுத பலத்தைக்கொண்டு அரசாங்கத்தைக் கவிழ்க்க அவர்கள் முயற்சித்ததாகவும், அது சம்பந்தமான கடிதங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் தெரியவருகிறது.

தமிழ் நாட்டிலும் போராட்டம்

ஜூலை 9-ல் சோஷலிஸ்டுகள் நடத்துவார்களாம்!

சென்னை, மே 13—

தமிழ் நாட்டில் ஜூலை 9-ந் தேதி முதல் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது என்று தமிழ் நாடு சோஷலிஸ்டுக் கட்சி முடிவு செய்துள்ளது.

அல்ஜீரியாவில் மனிதவேட்டை!

100 - பேர் கொல்லப்பட்டனர்

லாகூர், மே 12—

நேற்று அல்ஜீரியாவில் 100-க்கு மேற்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களை பிரெஞ்சுப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

குடந்தைவட்ட உழவர் முன்னேற்ற சங்க செயற்குழுஉறுப்பினர்கட்கு:

15—5—57 இரவு 10-மணிக்கு குடந்தை வட்ட உழவர் முன்னேற்ற சங்க செயற்குழுக் கூட்டம், சிற்றிடையாநல்லூர் பழவார் மணலில் தோழர் ம. கோ. மணி தலைமையில் நடைபெறும்.

கழகக் கூட்டம்

★

சிற்றிடையாநல்லூர்:

பழவார் மணலில்

15—5—57 மாலை 6 மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர்: கு. இராசமாணிக்கம்

பேசுவோர்:

க. அன்பழகன்

ம. கோ. மணி

பொ. தருமன்

கோ. சி. மணி

மகாபோதி சங்கம்

புத்தபெருமானின் 2,501-வது 'பரிநிர்வாண' விழாவினை ஒட்டி மகாபோதி சங்கத்தவர் மே 13, 14, 15-ந்தேதிகளில் விழா நடத்துவர்.

மே 14-ந்தேதி செவ்வாயன்று மாலை, சென்னை—எழும்பூர் கென்னட் சந்து, எண் 10-இல்லத்தில் நடைபெறும். கூட்டத்தில் கனம் மந்திரி எம். பக்தவத்சலம் தலைமையில் தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ. பேசுவார்.

ரூ. 34,500 கோடி வரவு-செலவுத் திட்டம்

வாஷிங்டன், மே 10—

அமெரிக்க செனட் சபையில் செவ்வாயன்று கொண்டுவரப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்டத் தொகை 7,180 கோடி டாலர்—அதாவது, ரூ. 34,500 - கோடியாகும்.

விசித்திரந்தான்!

பம்பாய், மே 13—

"கோர்ட் ஆப் 'சார்ட்ஸ்' நிர்வாகத்திலுள்ள எனது ஜமீனை உடனடியாக விடுவித்துத் தராவிட்டால், தான் காங்கிரசிலிருந்து விலகி, 60,000 பேர்களுடன் கம்யூனிஸ்டாகிவிடுவேன்" என்று தேபருக்கு பஸ்தார் மகாராசா தெரிவித்துள்ளாராம். இவர் ஜக்தால்பூர் மாவட்டக் காங்கிரஸ் குழுவின் தலைவராக உள்ளார்.

இலங்கைத் தமிழர் போராட்டம்

காந்தியார் வழிநடக்க உத்தேசம்

கொழும்பு, மே 12—

காந்தியார் காட்டிய பாதையில் நடக்கப்போவதாக இலங்கைத் தமிழர் தலைவர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

பண்டா சர்க்காரின் சிங்கள வெறியின் விளைவான ஒரு மொழிச் சட்டத்தை எதிர்த்துத் தமிழர்கள் நடத்தவிருக்கும் கிளர்ச்சியின் ஒரு பகுதியாக, காந்தியார் நடத்தியது போன்று தாங்கள் 'உப்பு சத்தியாக்கிரகம்' செய்யப்போவதாக அந்தத் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

புதிய முகவரி

திராவிட முன்னேற்றக் கழகம்

2/13, பிள்ளையார் கோயில் [தெரு

பல்லாவரம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.